[25th March 1959

MR. SPEAKER : How are we to know what the Central Government have set apart for Harijan Welfare? I do not know whether what the hon. Member is asking is a fact or not. The hon. Member should refer to things which the House is aware of and not to things which the House is not aware of.

SRI P. G. MANICKAM : ஸார், காலேஜில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் இந்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறதா ? அல்லது மற்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் இந்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : ஸ்காலர்ஷிப் இரண்டு வகைகளில் கொடுக்கப்படுகிறது. மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் சேர்ந்து கொடுப்பது ஒரு முறை. மத்திய சர்க்கார் நேரடியாகக் கொடுப்பது மற்றொரு முறை. கிராண்ட்-இன்-எய்டு வரும்போது நாமும் அவர்களும் சேர்ந்து கொடுக்கவேண்டி வரும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Power from Atomic Energy

*986 Q.—SRI A. VEDARATHNAM : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் அணுக்கதிர் மூலம் மின்சார சக்தி தயாரிக்கும் யோசனை அரசாங்கத்திற்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The question of establishing an Atomic Power Station in Madras State has been taken up with the Government of India.

Atomic Generating Centre

*987 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR AND SRI S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state the steps taken so far to establish an Atomic Generating Unit?

THE HON. SRI V. RAMAIAH : The attention of the hon. Members is invited to the answer to question No. 986 by Sri A. Vedarathnam.

SRI A. VEDARATHNAM : மத்திய அரசாங்கம் அணுசக்தி ஆராய்ச்சி நிலையத்தை நம்முடைய மாநிலத்தில் ஆரம்பிக்க என்ன உதவி செய்யக் கூடும். அதைப்பற்றி நம்முடைய அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது ? இந்த உலைக்கூடம் எப்பொழுது இங்கே துவக்க முடியும் என்பதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த "அடாமிக் பவர்" ஸ்டேஷனை நம்முடைய மாநிலத்தில் அமைக்கவேண்டுமென்று நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மாகாணத்தில் வேறு வழியில் உற்பத்தியாகக் கூடிய மின்சார சக்தி போதுமானதாக இல்லாவிட்டால் அதில் கவனம் செலுத்தி தகுந்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்ய "அடாமிக் பவர் ஸ்டேஷனை" அமைக்க வேண்டும். இப்பொழுது பம்பாயில் ஒரு ஸ்டேஷன் அமைக்கப்பட்டிருக்கிறது. அது வெற்றிகரமாக நடப்பதைப் பார்த்து அதற்குப் பிறகு மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் இன்னொரு அடாமிக் பவர் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்பது திட்டம். அந்தப் பவர் ஸ்டேஷனை எங்கே அமைப்பது என்று இன்னும் முடிவாகவில்லை. நம்முடைய மாநிலத்தில் தேவை அதிகமாக இருப்பதால் இங்கே அந்த "அடாமிக் பவர்" ஸ்டேஷனை அமைக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம்.

25th March 1959]

Sri N. K. PALANISAMI : இந்த அடாமிக் ஸ்டேஷனை வைத்து மின் சாரத்தை உற்பத்தி செய்ய எவ்வளவு செலவாகும் என்று ஏதாவது உத்தேசம் இருக்கிறதா ?

The Hon. Sri V. RAMAIAH : இதெல்லாம் "அடாமிக் எனர்ஜி கமிஷன்" பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

Sri K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் பதில் சொல்லும்போது நம் நாட்டில் சாதாரண துறையில் இருந்து—கன்வென்ஷனல் சோர்ஸ்—கிடைக்கக்கூடிய மின் சக்தியைப் பொறுத்துத்தான் இது முடிவு செய்யப்படும் என்று சொன்னார்கள். இன்னும் இந்த துறைகளில் இருந்து கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறதா ? முன்பு போட்ட திட்டப்படி எல்லாவற்றையும் செயலாக்கி விடவில்லையா ? இதையே இன்னும் ஓர் காரணமாக சொல்ல வேண்டிய அவசியம் என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : நமது மாகாணத்தில் இப்போது எந்த எந்த முறைகளில் எல்லாம் மின்சாரம் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோமோ அது போதாது என்று நாம் கருதுகிறோம். அதைத் தான் மத்திய அரசாங்கத்திற்கும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். நமது மாகாணத்தில் உள்ளதை எல்லாம் உபயோகப்படுத்திக்கொண்டது போல நமது அண்டையில் உள்ள இரண்டு மூன்று ராஜ்யங்களில் உற்பத்தியாகக் கூடியதை உபயோகப்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் பார்த்து இங்கே அடாமிக் ப்ளாண்டை வைக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

Primary Health Centre, Kalambur

*988 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) களம்பூர் ஆரம்ப சுகாதார விடுதியில் வேலை செய்யும் டாக்டர், கம்பவுண்டர் இவர்கள் மீது மருந்துகளை விற்றுவிடுகிறார்களென்றும், பொதுமக்களைச் சரிவர கவனிப்பதில்லையென்றும் புகார் வந்ததா ?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The complaint is being enquired into.

Sri S. M. ANNAMALAI : இந்தக் களம்பூர் ஆரம்ப சுகாதார விடுதி முன்பு இருந்த டாக்டர் காலத்தில் நமது மாநிலத்திலேயே மிகவும் சிறப்பாக நடந்து வந்தது. இப்போது ஓய்வு பெற்ற டாக்டரைப் போட்டிருப்பதனால் சரியாக நடைபெறவில்லை. இந்த விடுதிக்கு அமெரிக்காவில் இருந்து கூட உதவி வருகிறது. வெளி நாட்டார்கள் வேறு அடிக்கடி வந்து பார்க்கிறார்கள். ஆகவே இந்த ஆரம்ப சுகாதார விடுதி நன்றாக நடக்க ஒரு இளம் டாக்டரை பதவியில் உள்ளவரை இங்கே நியமிப்பார்களா ? மேலும் இங்குள்ள மருந்து நல்ல வகையில் பொது மக்களுக்கு உபயோகப்படவில்லை என்ற புகார் இருக்கிறது. ஆகவே கம்பவுண்டரையும், இப்போதுள்ள டாக்டரையும் உடனடியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதை விசாரணை செய்ய உத்தரவு போட்டிருக்கிறோம். விசாரணையின் முடிவு இன்னும் வரவில்லை. வந்தபிறகு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை எடுத்துக்கொள்ளலாம். முன்பு இருந்த டாக்டர் காலத்தில் நன்றாக நடந்ததாகச் சொன்னார்கள். அந்த மாறுதலுக்கும் கனம் அங்கத்தினர் தான் ஓரளவு பொறுப்பாளி.